ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி சு. விபவஸ்ரீ மாசிமீ பகுதி உ.
Vol 6. *February & March 1929.* No. 2.

தர்மம்.

[வித்யா ரத்நாகர பண்டிதவர ஸ்ரீ. உ. வே.
வி. ஆர். நரஸிம்ஹாசார்யஸ்வாமி எழுதியது]

(5-ம்தொகுதியின் 172-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்படி தர்ம அர்த்த காம மோக்ஷங்கள் எனப்படுகின்ற புருஷார்த்தங்களின் தத்வத்தைப்பற்றிய விவாதம் விரிவடைந்து அவ்வவ் மதவாதிகளும் முரண்பட்டுத் திணறுகின்ற தருணத்தில் உலகத்தின் நல்வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒற்றுமையை ரக்ஷித்து வளர்ப்பதில் கண்ணுங்கருத்து முள்ளவர்களான நீதிதந்த்ர நிபுணர்கள் தீர்க்க திருஷ்டியுடன் இவ்விவாதங்களையெல்லாம் தடஸ்தராய்த் தாம்நின்று ஸமரஸமாய் சமிப்பித்து இம்மதவாதிகள் பலரையும் ஒருவழிக்கு அழைத்துவந்து நடத்தி அவரவரும் தாம் தாம் வேண்டும் பயனைப் பெற்றுப்போரும்படி அரும்பாடுபட்டிருக்கின்றனர். இது க்ரமந்தானே. "நீவா: கலஹமிச்சந்தி ஸந்திமிச்சந்தி ஸாயவ:" "நீசா: கலஹமிச்சந்தி ஸந்திமிச்சந்தி ஸாதவ:" என்று நீதியிருக்கின்றதன்றோ! இவர்கள் தர்மமென்பது எது? என்று விசாரித்து நிர்ணயிக்கும்போது மற்றைய எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொள்ளும்படியானதொரு ஒப்பற்ற உத்தம ரீதியிற்சென்றிருப்பது மிக்கப் போற்றத்தக்கதாய் விளங்குகின்றது.

மீமாம்ஸகர்கள்.— “சொத³நா லக்ஷணொ(அ)ர்தொ² த⁴ர்ம:” “சோதனு லக்ஷண: அர்த்த: தர்ம:” என்று வேதவிதியிற் கூறப் பட்டவையே தர்மமென்றூர்கள்.

மனுஸ்மிருதியில், “வித்³வத்³பி⁴: ஸெவித: ஸத்³பி⁴: நித்யமத்³வெஷராகி³பி⁴:। ஹ்ருத³யெநாப்⁴யநுஜ்ஞாத: யொ த⁴ர்மஸ்தம் நிபொ³த⁴த” வித்வத்பிஸ்ஸேவிதஸ் ஸத்ப்பி: நித்ய மத்வேஷராகிபி:, ஹிருதயே நாப்யனுக்ஞாத: யோ தர்மஸ்தம் நிபோதத” என்று தர்ம லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு அதனை வியாக்கியானிப் பவர்கள் வேதார்த்தவேதிகள் மனமொப்பிச்செய்யு மவைகளே தர் மங்களென்று பொருள் உரைத்துவிட்டு வேதவித்துக்களென்றதனுல் வேதத்திற் கூறப்பட்டதே தர்மமென்றும் மனமொப்பிச்செய்யப்படு மவையென்றதனுல் ச்ரேயஸ்ஸாதனமானதே தர்மமென்றும் தாத்ப தர்ய மேற்படுவதாகக் கூறுகின்றனர். ஹாரீதர் முதலான மற்ற ஸ்மிருதிகாத்தாக்களும் இவ்வபிப்பிராயத்தைக்கொண்டே “ஶ்ருதி ப்ரமாணகொ த⁴ர்ம:” “சுருதிப்பிரமாண கோ தர்ம:” என்று டீர்ம லக்ஷணத்தைச் சொல்லுகின்றனர். தார்க்கிகர்களோவெனில்; “யதொ(அ)ப்⁴யுத³ய நிஶ்ரெயஸ ஸித்³தி⁴: ஸ த⁴ர்ம:” “யதோ அப் யுதய நிச்ரேயஸஸித்தி: ஸ தர்ம:” என்று தர்ம லக்ஷணத்தைக் குறித்தார்கள். இதற்கு அவர்களுள் ஏகதேசிகள், அப்யுதயமென் பது தத்வஜ்ஞானம், நிச்ரேயசமென்பது ஆத்யந்திகீ துக்கநிவிருத்தி: (அடியோடு துக்கங்கள்யாவும் அறவே ஒழிவது) அதாவது மோக்ஷம். ஆக மோக்ஷத்தையும் அதற்கு ஸாதனமான தத்வக்ஞா னத்தையும் ஸாதித்துத் தருமதுவே தர்மமென்று வியாக்கியானித் தனர். மற்ருெரு சார்பாரோவெனில் அப்யுதயமென்பது ஸ்வர்க்கம். நிச்ரேயஸமென்பது மோக்ஷம். ஆக இவ்விரண்டையும் பயக்கு மதுவே தர்மமாகு மென்றூர்கள்.

இம்மாதிரியான தர்ம லக்ஷணங்களெல்லாம் வேதமே பர மோன்னதமான பிராமணமென்கிற எண்ணத்தின் பேரிலும் அப் பிரத்தியக்ஷமான ஸ்வர்க்க மோக்ஷாதி பலங்களுண்டென்கிற நம் பிக்கையின்பேரிலுமே எழுந்தவையாகையால் வேதத்திற்கு அப்

பெருமையிருப்பதாக நினையாதவர்களும் பரோக்ஷ பலத்தைப்பற்றிய பூர்ண நம்பிக்கைகொள்ளாதவர்களுமான சார்வாகர் முதலான நிபுணர்களெல்லாம் இப்படி தர்மலக்ஷணங்குறிப்பதை எதிர்க்கின்றார்கள்.

நீதிபத்ததியில் நிபுணர்களான மேதாவிகள் பலர் தாம் வேதத்தைப் பிரமாணத்திற் சிறந்ததாக நினைத்திருந்தாலும் பரலோகத்தை நம்பியிருந்தாலுங்கூட அப்படியல்லாதவர்களின் கொள்கையைத் தகர்ப்பதில்லை. ஏனெனில் ஆஸ்திகரோ நாஸ்திகரோ எவராயிருந்தாலும் அங்கு வாசியொன்றையும்பாராமல் நடுநிலைமை வஹித்து இஹத்திலாவது அவர்கள் எல்லோரும் ஒருவரோடொருவர் ஒத்துநின்று இஹப்பயனை ஸாதித்துத்தரும் தருமத்தையேனும் அன்யோன்யம் உதவுவாராகத்தோளோடு தொள்கொடுத்துத்தாங்கி நின்று அதன்பயனைத் தவறாது யாவரும் ஒருமிக்கப்பெற்றுச் சுகிக்கட்டுமே என்பதேதான் அவர்களுடைய அபிஸந்தி. ஆனதினாற்றான் "வேதப்பிரமாணகோ தர்ம:" என்று தர்மலக்ஷணங்கூறியவரை எதிர்க்கின்ற சார்வாகர் முதலானோரின் கூற்றையும் ஏற்றுக்கொண்டே பேசுகின்றார் நீதி நிபுணராகிய வாமனர், "𑌅𑌨𑍍𑌯𑍇
𑌪𑍁𑌨𑌰𑍇𑌵𑌂 𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇। 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑍋 𑌵𑍇𑌦 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌕𑌃
𑌸 𑌧𑌰𑍍𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍇𑌵 𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌂। 𑌤𑌤𑍍𑌰 𑌅𑌨𑌰𑍍𑌥𑌾𑌵𑌹𑌾𑌨𑌾𑌂
𑌶𑍍𑌯𑍇𑌨𑌾𑌦𑍀𑌨𑌾 𑌮𑌪𑍍𑌯𑍁𑌪𑌦𑌿𑌶𑍍𑌯 𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌵𑍇𑌦𑍇𑌨 𑌯𑌦𑍍𑌯𑌦𑍁𑌪
𑌦𑌿𑌷𑍍𑌟𑌂 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌅𑌭𑍍𑌯𑍁𑌦𑌯 𑌨𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍇𑌯𑌸 𑌸𑌾𑌧𑌨𑌂 𑌨𑌭𑌵𑌤𑌿।
𑌅𑌤𑌃 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑌂 𑌅𑌨𑍁𑌕𑍍𑌤𑌂𑌵𑌾 𑌯𑌦𑌭𑍍𑌯𑍁𑌦𑌯 𑌨𑌿𑌶𑍍𑌶𑍍𑌰𑍇𑌯
𑌸𑌾𑌧𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌏𑌵 𑌧𑌰𑍍𑌮𑌃" இதி—"அந்யே புநரேதந்நாத்ரியந்தே, தேஷாம் மத்யே யோ வேத ப்ரமாணக: ஸ தர்ம: இதி லக்ஷணமேவ அயுக்தம், தத்ர அநர்த்தாவஹாநாம் ச்யேநாதீநாமப்யுபதிச்ய மாநத்வாத், வேதேநயத்யதுபதிஷ்டம் தத்ஸர்வம் அப்யுதய நிச்ரேயஸ ஸாதநம் நபவதி, அத: வேதைருக்தம் அநுக்தம்வா யதப்யுதய நிச்ரேய ஸாதநம் பவதி ஸஏவ தர்ம:" இதி—மற்றவர்களோவெனில் இதனையாதரிக்கின்றார்களில்லை. அவர்கள் எண்ணத்தில் எது வேதப்பிரமாணத்தினாற் கிடைக்கதோ அதெல்லாம் தர்மமாகுமென்கிற லக்ஷணமே யுக்தமானதல்ல. அதில்

அனர்த்தகரமான சியேனயாகம் முதலான கொடுஞ்செயல்களு மல்லவோ சொல்லப்படுகின்றன. இனிவேதத்திற் சொல்லியதெல்லாம் க்ஷேமகரமேயென்பதற்கு இடமேது? ஆதலால் வேதங்களிற் சொல்லியிருப்பதும் சொல்லியிராததும் ஒருபொருட்டாகாது. எவர் எங்குச்சொல்லியதாலுைம்ஸரி, எது அப்யுதய நிச்ரேயஸங்களுக்கு ஸாதனமாமோ அதுவேதான் தர்மம் எனத்தக்கதாம். இங்கும் இவர் அப்யுதய நிச்ரேயஸங்கள் என்பன மற்றுஞ்சிலரைப்போல ஸ்வர்க்க மோக்ஷங்களையாவது தத்வஞான முக்திகளையாவது சொல்லியதல்ல; மற்றென்னவென்னில் அப்யுதயம்—ஸுகம். நிச்ரேயஸம்—கல்யாணம். என்று விளக்கியிருக்கின்றனர். ஆகவே மானிடர்விரும்பும் ஸுகமும் அதனைத்தரும் மங்களவஸ்துக்களும் எதனாலுண்டாகுமோ அது தர்மமென்றதாயிற்று. இனி இதை எந்த ஆஸ்திகரும் நாஸ்திகரும் ஆக்ஷேபிப்பதற்கில்லை. அவரவர் மனோரதப்படியே அவரவர் பொருள்படுத்திக்கொள்வார்கள். இப்படியே அர்த்தகாமங்களின் லக்ஷணத்தைக்குறிக்கும்போது குறிப்பிட்ட எவ்வகுப்புக்கும் மனத்தாங்கலின்றி ஸர்வரும் ஒப்புக்கொள்ளும் வகையிற்றான் இவர்கள் லக்ஷணங்கூறுகின்றனர்.

இதில் ஸோமதேவஸூரி என்கிற நீதிசாஸ்திரி அர்த்தத்திற்கு லக்ஷணஞ்சொல்லுகையில் "யதஃ ஸவ்வ ப்ரயோஜந ஸித்திஃ ஸோऽர்த்தஃ" "யத: ஸர்வ ப்ரயோஜந ஸித்தி: ஸோர்த்த:" எதனால் ஸமஸ்த அபிமதமும் கைகூடுமோ அது அர்த்தமென்பதாகுமென்கிறார். காமத்தைக் குறிக்கும்போது "ஆபிமாநிக ரஸாநுவித்தா ஸவ்வேந்த்ரிய ப்ரீதிஃ யதஃ ஸ காமஃ" "ஆபிமாநிக ரஸாநுவித்தா ஸர்வேந்திரிய ப்ரீதி: யத: ஸ காம:" நாம், என்று அபிமானிக்கிற ஒரு அர்த்தத்திற்கு அதாவது ஆத்மா எனப்படுமதற்கு இந்திரியவாயிலாக வருகிற ஸந்தோஷங்களுக்குக் காரணமாயிருக்கின்ற புஷ்ப சந்தன வனிதா கிருஹாராம க்ஷேத்ர தன தானியாதிகளெல்லாம் காமமென்றதாயிற்று. நிற்க;

தர்மத்தை ஆர்ஜனம் பண்ணுவதற்கு வழியென்ன? என்கிற விசாரணையில் சிலர் தேவர்களை பஜிக்கவேண்டு மென்றனர். வேறு சிலர் தைவத்தைத் துதிக்கவேண்டு மென்றனர். மற்றுஞ் சிலர் ஈசனை

நேசிக்க வேண்டுமென்றனர். இப்படியே சிலர் ஸ்நானமென்கிறார். சிலர் ஜெபமென்கிறார். யமமென்கிறார். நியமமென்கிறார். பலர் பல விதமாய்ப் பேசுகின்றார். இந்த நிலைமையில் நீதிக்ஞர்கள் சொல்வதென்ன? “𑌆𑌤𑍍𑌮𑌵𑌤𑍍 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌕𑍁𑌶𑌲𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 𑌚𑌿𑌨𑍍𑌤𑌨𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 𑌤𑍍𑌯𑌾𑌗 𑌤𑌪𑌸𑍀 𑌚 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌗𑌮𑍋𑌪𑌾𑌯𑌾𑌃” “ஆத்மவத் பரத்ரகுசல வ்ருத்தி சிந்தநம் சக்தித: த்யாக தபஸீச தர்மாதிகமோபாயா:” தம்மிடம் போலவே பிறரிடமும் க்ஷேமகரமாக நடக்கவே சிந்தை கொண்டிருப்பதும் தன்னாலியன்றவரை தியாகஞ் செய்வதும் தபஸ் செய்வதும் தருமத்தையடையும் வழியாகும்; என்றனர். வேதாந்திகளுங்கூட “ஆத்மவத் ஸர்வபூதாநி” என்று தன்னைப்போலவே பிறரையும் பார்க்கவேண்டுமென்றும் அதில்லாமற் போவது பெரிய அதர்மமென்றும் பஹிரங்கமாய்க் கூறுகின்றனர். மற்ற எந்த மதவாதிகளிலும் இதனை ஆக்ஷேபிப்பாரில்லை. எந்த நியாயவாதியும் தியாகத்தையும் போற்றாதிருக்கவில்லை. தபஸ், என்கிற இந்திரிய நிக்ரஹத்தையோ தார்மிகர் எல்லோருமே வரவேற்கின்றனர். கேவலம் அர்த்த தந்திரிகளுங்கூட இந்திரிய நிக்கிரஹம் அத்தியவச்யமே யென்கின்றார்.

ஒரு நீதிநிபுணர் இந்திரிய ஜயமென்பதை விளக்குவாராய் “இஷ்டே அர்த்தே அநுஸக்த்தி: விருத்தே அப்பிரவிருத்தி: இந்திரிய ஜய:” இஷ்டமான விஷயங்களில் அளவு கடந்து செல்லாமையும், வேண்டாமென்று தடுக்கப்பட்டிருக்கும் விஷயங்களில் அடியெடுத்து வைக்காமையும் இந்திரியஜயமாகும்; என்றுவிட்டு அதன் அதன்பிறகு இப்படியும் கூறுகின்றார். “அர்த்த சாஸ்திராத்தியயனம்வா” அர்த்த சாஸ்திரத்தைக் கற்றுணர்வதாவது இந்திரிய ஜயமாகும்; என்றார்.

இதன்மேல் அர்த்த சாஸ்திரத்தைக் கற்பதற்கும் இந்திரிய ஜயத்திற்கும் என்ன ஸம்பந்தம்? அதனை இந்திரிய ஜயமென்கைக்கு, என்ற கேள்வி எழவே “காரணே கார்யோபசாராத்” காரணத்தைக்காரியமென்று உபசாரமாகச்சொல்வது முறைதானே என்றார். இதனால் தர்ம சாஸ்திரம் தத்வசாஸ்திரம் இவைகளினின்றும் ஏன்

இந்திரியஜெயம் என்பதில்லை. அர்த்த சாஸ்திரத்தினாலேயே அது நன்றாக ஏற்படலாகுமென்றதாயிற்று. ஆகவே அர்த்த ஹாநி ஏற்பட்டுவிடுமென்கிற பயந்தான் மாந்தரை ஜாக்கிரதையாய் அடங்கியிருக்கச்செய்யும். ஆதலால் இந்திரிய ஜயத்திற்கு அர்த்த சாஸ்திரமே ஸரியான வழிகாட்டியாயிருக்குமென்று தாத்பரியம்.

இதுநிற்க, தர்மார்த்த காமங்கள் மூன்றிற்குள் எது உயர்ந்தது? எதைமனிதர் முக்கியமாய்க் கோரிப்பெறவேண்டும்? என்கிற விஷயத்திலும் சில அபிப்பிராயபேதம் மதவாதிகளுக்குள் உண்டு. தர்மசாஸ்திரிகள் தர்மமொன்றையேதான் மதிக்கவேண்டும். அது குன்றுமானால் மற்ற அர்த்த காமங்களிரண்டையும் அடியோடு விட்டே விடவேண்டுமென்கின்றனர். அர்த்த சாஸ்திரிகளோவெனில்; கிளைகள்போன்ற தர்மகாமங்கள் தொலைந்தாலும் வேர்போன்ற அர்த்தத்தைமட்டும் ஓரணுவளவும் குறைந்துவிடாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்கின்றனர். காமதந்திரிகளோ தர்மம் அர்த்தம் இவ்விரண்டும் காமலாபத்திற்கேயாதலின் காமத்தை எத்துணையும் கைவிடவே'கூடாது. இன்றேல் கைக்கெட்டிய பழத்தைவிட்டுத் தழையைக் கட்டிச் சுமப்பதுபோலாகு மென்கின்றனர். இப்படி த்ரிவர்க்கத்தின் அங்கீகாரத்தைப்பற்றி பின்ன அபிப்பிராயப்படுகின்றவர்களை நீதிநிபுணர்கள் இலகுவாக ஸமரஸப்படுத்துகின்றனர். அவர்கள் இந்த நோக்கத்துடன் எழுதியிருக்குஞ் சில வாக்கியங்களை உள்ளபடியே பெடுத்து வரைந்து அவற்றின் உரையையும் கூறுகின்றோம்.

“பீஜபோஜிந: குடிம்பிநஇவ நாஸ்தி அதார்மிகஸ்ய ஆய்த்தம் கிமபி சுபம்” விதைமுதலை வருத்துத் தின்றுவிட்ட குடியானவனுக்குப்போல மேன்மேல் தர்மத்தைச் சேகரியாமல் அதன் பயனை மட்டும் அனுபவித்துக்கொண்டிருப்பவரின் எதிர்காலம் கடுகளவும் மங்களமாயிராது.

ஆனாலும், “ய: காமார்த்தா வுபஹத்ய தர்மமேவ உபாஸ்தே ஸ: பக்வம்க்ஷேத்ரம் பரித்தியஜ்ய ஊஷரம் க்ருஷதி” யாவனொருவன் அர்த்தகாமங்களை அடியோடு அழியவிட்டுத் தர்மத்தையே தாங்கி நிற்கின்றானோ அவன் விளைந்து சாய்ந்திருக்கும் வளமுள்ளவயலை

அழியவிட்டு உவர் நிலத்தில் கலப்பை கட்டிக் கிண்டிக்கொண்டிருக்கின்றான்.

"ஸகலு ஸுகீ யோ அமுத்ர ஸாகா விரோதேன ஸுகமநுபதி" (அவனல்லவோ உண்மையாய் ஸுகிப்பவன்? யாவனொருவன் பிந்திய ஸுகத்தைக் கெடுத்துக்கொண்டுவிடாதவகையில் இப்போதையஸுகத்தை அனுபவிக்கின்றானோ) இம்மாதிரியெல்லாம் பல் வகையில் எல்லா மதஸ்தர்களையும் ஸமரஸப்படுத்த அவர்கள் தக்கபடி ஒவ்வொரு துறையிலும் முயற்சிக்க அணுவளவும் தவறுகிறதேயில்லை.

நிற்க, மோக்ஷத்தைப் பற்றியோவெனில், அவர்கள் எவ்வித நிர்ணயத்தையும் கூறிவிடவில்லை. "ததாசார்யைஸ்து தத்சாஸ்திரம் நிர்மிதம் தத்ஹிதார்த்தகம் வியவஹாரேது யா நீதி: உபயோரபி வாதிநீ" ஆத்மாவைச் சார்ந்ததான பரலோக ஸௌக்கியத்தைப் பற்றிய கவலையை அவ்வோ ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு மதஸ்தரும் தம் தம் ஆசிரியர் காட்டிய நல்வழியிலேயே செல்லட்டும். அப்பாதையில் மற்றைய மதவாதிகள் குறுக்கிட்டு வழிமறைக்கவேண்டாம். இவ்வுலக நல்வாழ்க்கையின் முறைகளில் அபிப்பிராயத்திற்கு மாறுதலேயில்லையாதலால் இத்துறையில் ஆஸ்திகர், நாஸ்திகர், வைதிகர், லௌகிகர், சாக்கியர், சமணர், புத்தர், ஜைனர், முகமதியர், கிருஸ்துவர் என்கிற வாசி லேசமுமின்றி எல்லோரும் ஒரேதாயின் வயிற்றுப்பிள்ளைகளென்று நல் எண்ணங்கொண்டு தோளுக்குத் தோள்கொடுத்து உதவி தோளோடு தோள் போட்டுக் குலாவித் தீவினை தோன்றியதையெல்லாம் எதிர்த்து ஜெயித்து நற்பயன்பெற்று ஒப்பற்றவராய் ஒத்துவாழ்வீர்களாக; என்று மனப்பூர்வமாய் ஆசிர்வதித்திருக்கின்றனர்.

சுபம். சுபம்.

28

ஸ்ரீ:

பருத்திபட்ட பன்னிரண்டும் படுதல்.

பருத்திபட்ட பன்னிரண்டும் படுதல் என்பது நம்பூர்வாசார்யர்கள் பலவிடங்களிலும் எடுத்தாளும் திருஷ்டாந்தவாக்யமாம். அரிய தத்வார்த்தங்களைத் திருஷ்டாந்த வாயிலாக எடுத்து விளக்குவதிலும் நம்பூர்வாசார்யர்கள் ஸமர்த்தர்களென்பது ப்ரஸித்தம். இந்த வாக்யத்தின் உட்பொருளறியவே அவர்களது விசேஷஜ்ஞானத்தின் பெருமை இத்துணையதென்பது விளங்கும். இவ்வுலகம் எம்பெருமானுக்கு ஸர்வஸ்வாதீனமாக விருக்கின்றதென்பதற்கு இந்த வாக்யம் திருஷ்டாந்தமாக எடுத்துரைக்கப்பட்டது. பஞ்சு பன்னிரு வகையான் அவஸ்தையடைந்தும் சேதனனுக்கு வசப்பட்டிருக்கும் என்பது திருஷ்டாந்தத்தின் பொருளாம். இத்திருஷ்டாந்த ஆற்றலான் இவ்வுலகம் ஸர்வேசுவரனுக்கு இஷ்டவிநியோக போக்கியமாயிருக்குமென்று கொள்ளத்தக்கது. தன் ஸங்கல்பத்தாலே எல்லாவுலகங்களையும் படைத்தளித்தழிக்கும் ஸர்வவல்லவனுக்கு இவ்வுலகம் விதேயமாயிருக்கும் என்பதால் என்ன ஆச்சர்யங்காணப்படுகிறது? ஒன்றுமில்லையே என்ற உதாசீனத்வம் உண்டாகலாம். அதைக்கல இந்தத்திருஷ்டாந்தத்தை எந்த ப்ரகரணத்தில் எடுத்தாண்டுள்ளார்களென்று ப்ரகரணச்சோடியைத்துணர வேண்டும். அது வருமாறு:—

ராஜ்யத்தை இழந்துநின்ற இந்திரனுக்கு அதை மஹாபலியிடத்திலிருந்து வாங்கிக்கொடுப்பதற்காக ஸர்வேசுவரன் தன்னை இரப்பாளனுக்கி மஹாபலிபாற்சென்று மூவடி மண்வேண்டிநின்றபோது 'எம்பெருமானே! இஃதென்ன உன்மாயம்? உனக்கு எவ்வகையாலும் ஸ்வாதினமாயிருக்கிற பூமியைப் பெறுவதற்காக உனக்கெவ்வாற்றானும் ஒவ்வாதிருக்கின்ற யாசகவேஷத்தைத் தரித்து இரந்து நின்றனையே' என்று குறிப்பிடுகிற ப்ரகரணத்தில் இந்தத் திருஷ்டாந்த வாக்யம் உரைக்கப்பட்டுளது. இனித் திருஷ்டாந்த வாக்யத்தின் விவரணம் உரைக்கப்பெறும்.—

பருத்தி, கொட்டைவாங்கப்படுதல், பன்னப்படுதல், சுருட்டப் படுதல், நூலர்க்கப்படுதல், பாவோடப்படுதல், நெய்யப்படுதல், மடிக் கப்படுதல், விற்கப்படுதல், தோய்க்கப்படுதல், உலர்த்தப்படுதல், உடுத் தப்படுதல், கிழிக்கப்படுதல் என்ற பன்னிரண்டு அவஸ்தைகளையும் அடைகின்றது. தார்ஷ்டாந்திகத்தில் லயாவஸ்தையில் ஸர்வேசு வரன் தன்னிடத்திற் சேர்ந்துள்ள மூலப்ர ருதியை விபக்தமாக்கி, பஞ்சீக்ருதமாக்கி, அண்டமாக்கி, தேவாதி சரீரங்களாக்கி, லோகவ் யவஸ்திதியுண்டாக்கி, அவாந்தரஸ்ருஷ்டியைப்பண்ணி, ரக்ஷித்து, பிர்ம்மாதிகளுக்காக்கி, ப்ரளயத்திலே எடுத்து, எயிற்றிலேவைத்து, வயிற்றிலேவைத்து, உமிழ்ந்து பின் தன்வயின் அடக்கிக்கொள்கிறு றுதலால் இப்பூமியும் பன்னிரு அவஸ்தையடைகின்றதென்பதறிய லாம். இங்குப்பூமி என்றது பூமிக்குக்காரணமாகிய மூலப்ர கிருதியை. காரணத்தைக் காரியமாக உபசரித்ததென்றறிக. இனித் திருஷ்டாந்த தார்ஷ்டாந்தங்களை இயைத்துணர்த்தப்பெறும்.—

திருஷ்டாந்தத்தில் கொட்டைவாங்கல் என்பது பருத்தியிலிரு ந்து விதையைப்போக்கிப் பஞ்சையெடுப்பதாம். அதுபோல எம் பெருமான் தன் திருமேனியில் அந்தர்ப்பவித்திருந்த மூலப்ரகிருதி யின் ஸூக்ஷ்மாவஸ்தை சிறிது தோன்றுமாறு செய்வதாம். இங் ஙனம் சிறிது தோன்றுமாறு செய்தலை † விபக்தமாக்கல் என்று வழங்கப்படும். பன்னல் என்பது பஞ்சை நெகிழ்த்தி நூல் நூற் பதற்கு யோக்யமாகச் செய்வதாம். அதுபோல மூலப்ரகிருதியின்

---

† விபக்தம் என்பது மூலப்ரகிருதியின் ஸூக்ஷ்மாவஸ்தைகளுள் ஒன் றும். ஏனைய ஸூக்ஷ்மாவஸ்தைகள் அபிவிக்தமஸ் என்றும் அக்ஷரம் என்றும் வழங்கப்பெறும். இவற்றுள் அபிவிக்ததமஸாவது:— பிறர்களாலறிதற் கியலாது ஈசுவரனாலறியத் தக்கதாயிருப்பதாம். விபக்த்தமஸாவது:—ஈசு வரனுலேவப்பட்டதாய் பெயர்வேற்றுமை யடைதற்குரிய நன்னிலைமை யெய்தி காரியப்படும் செவ்வியினையுடையதாயிருப்பதாம். அக்ஷரமாவது:— ஆத்மாக்களின் கூட்டங்களைத் தன்னிடங்கொண்டுள்ள சடப்பொருளென அறிதற்குரியதாயிருப்பதாம். பூமியிற்பதிந்த விதைபோன்றது அபிவிக்த தமஸென்றும், மண்ணினின்றும் சிறிது வெளித்தோன்றுகின்ற விதை போன்றது விபக்ததமஸென்றும், நீரிற்கலந்து நன்றாய் நனைந்து உறுப்புச் சிதைவினையுடைய விதைபோன்றது அக்ஷரம் என்றும் இவற்றின் வேறு பாட்டை இவ்வுதாரணங்களால் அறியலாம்.

தாமஸாஹங்காரத்திலிருந்து தோன்றிய ஆகாசம், வாயு, அக்னி, நீர், ப்ருதிவி (மண்) என்ற பஞ்சபூதங்கள் கார்யப்படுவதற்கு யோக்யமாக ஒன்றோடொன்று கலப்புறும்படி செய்வதாம். இந்தப் பூதக்கலப்பு § பஞ்சீக்ருதம் என்று வழங்கப்படும்.* சுருட்டல் என்பது நன்குபன்னிய பஞ்சைச்சுருட்டிப் பட்டையாகச்செய்வதாம்.

அதுபோல பஞ்சீகரணமான பூதங்களால் அண்டமாக்குவதாம். நூலாக்கல் என்பது பட்டையாக்கிய பஞ்சை இழையாக நூற்றலாம். அதுபோல பஞ்சீக்ருதங்களால் அண்டாகாரமான திரண்டவடிவினின்றும் தேவாதிசரீரங்களையுண்டாக்குவதாம். பாவோடலென்பது நூலை நெய்தற்கு யோக்யமாம் படி ஒழுங்கு செய்வதாம். அதுபோல * அவாந்தர ஸ்ருஷ்டிக்கு யோக்யமாம்படி லோகங்களை ஒழுங்குபடுத்துவதாம் நெய்தலாவது வஸ்திரமாதற்குச்செய்யும் தொழிலாம். அதுபோல அவாந்தர ஸ்ருஷ்டியைச் செய்வதாம். மடித்தலாவது நெய்தற்றொழிலான் முற்றுப்பெற்ற வஸ்திரத்தை விற்றற்கு யோக்யமாம்படி போற்றிவைப்பதாம். அதுபோல அவாந்தர ஸ்ருஷ்டியால் தோன்றிய வஸ்துவை பிறர்க்குரிமையாகும்படி போற்றிவைப்பதாம். விற்றலாவது மடித்துப்போற்றி வைக்கப்பட்ட வஸ்திரத்தை பிறருக்கு ஸர்வ ஸ்வாதீனப்படுத்துவதாம். அதுபோல அவாந்தர சிருஷ்டிசெய்து போற்றி வைக்கப்பட்ட அண்டங்களை பிர்ம்மாதிகட்கு ஸ்வாதீனப்படுத்தலாம். தோய்த்தலாவது அவ்வஸ்திரத்தை நீரில் நனைத்தலாம். அதுபோல் பூமியைப் பிரளயங்கொள்ளச்செய்வதாம். உலர்த்தலாவது நீரில் தோய்த்த வஸ்திரத்தை

---

§ பஞ்சீக்ருதமாவது:—ப்ருதிவீ அப்பு தேயு வாயு ஆகாசம் என்ற பஞ்சபூதங்கள் ஒன்றொடொன்று கலப்புறும்படி செய்வதாம். இப்பூதங்களை ஒன்றோடொன்று கலப்புற்றாலன்றிக் காரியப்படாவாதலால் மண்ணையும் மணலையும் நீரையுஞ்சேர்த்து ஒரு திரவியமாக்கிச் சுவரிடுவோரைப்போல இப்பஞ்சபூதங்களைக் கலப்பித்து உலகையுண்டுபண்ணுகிறான். இவற்றைக் கலப்பிக்கும்போது ஒவ்வொன்றிலும் பாதிக்கூற்றையெடுத்து அவ்வப்பாதிக்கூற்றை நன்னான்காகக்கூறிட்டு அவற்றை மற்றவற்றில் கலப்பித்தலாம்.

* அவாந்தர ஸ்ருஷ்டியாவது:— மஹா ஸ்ருஷ்டியின் இடையிலே செய்கிற ஸ்ருஷ்டியாம்.

அணிந்துகொள்வதற்கு யோக்யமாய் உலர்த்துவதாம். அதுபோல ‘‘கோவலராகவென்றாய் நிலங்கோட்டிடைக் கொண்டவெந்தாய்’’ என்றபடி வராக ரூபியாய்த் தன்கொம்பினால் பூமியைப்பிரளய நீரி லிருந்து எடுப்பதாம். உடுத்தலாவது உலர்த்தப்பட்ட வஸ்திரத்தைத் தன் சரீரத்தில் அணிந்துகொள்வதாம். அதுபோல பூமியைத் தன் வயிற்றில் வைப்பதாம். கிழிதலாவது அணியப்பட்ட வஸ்திரம் ஜீரண மடைவதாம். அதுபோல வயிற்றில் வைக்கப்பட்ட பூமியை உமிழ்ந்துபின் அதைத்தன்வயின் ஒடுக்குவதாம்.

ஆக இந்தத்திருஷ்டாந்தத்தால் உலகம், ஸர்வேசுவரனுக்கு எவ்வகையாலும் ஸ்வாதீனமாயிருக்கிறதென்பது தெளிவாயிற்று.

ப. அ.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(20-ம் பக்கத்தொடர்ச்சி)

ஐந்தாவது அதிகாரம்.

பாண்டவர்களிருந்தனரா? பாணினியின் 6, 2, 38 சூத்திரத்தில் பாரதமென்கிற சப்தம் காணப்படுகிறது. ஆகையால் பாணினி காலத்துக்குமுன்பே மகாபாரதமென்னும் கிரந்தம் பிரசாரத்திலிருந்தது. மறுபடியும் பாணினி சூத்திரம் ‘‘𑌗𑌵𑌿𑌯𑍁𑌧𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌰𑌃’’ ‘‘கவியுதிப்யாம் ஸ்திர:’’ கவியுதி சப்தங்களுக்குப்பின் ஸ்திர ஸப்தப்பிரயோகமிருந்தால்......என்ற எழுத்தை யெடுத்து வரும். இதன் உதாரணம் ‘𑌗𑌵𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃, 𑌯𑍁𑌧𑌿𑌷𑍍𑌠𑌿𑌰𑌃’ ‘கவிஷ்டிர:, யுதிஷ்டிர:’ என்பதாம்.

மறுபடியும் பாணிநி ஸூத்ரத்தில் 2, 4, 66-ல் பரதகோத்திரத்தின் உதாரணம் யுதிஷ்டிரா: உரைக்கப்பட்டுளது. இன்னும் "ஷ்ரியாமவந்தி குந்தீ குருப்யஶ்ச வாஸுதேவ வாஜுர்நாப்யாம்" வாறு. "ஸ்திரியாமவந்தி குந்தீ குருப்யச்ச வாசுதே வார்ஜுநாப்யாம்" வுந். "நஹாரண நவாந வெஹா நரஸத்யம் நமூசி 'நகுல' நவ நவாம்ஸக நக்ஷத்ர நக்ர நாகேஷு ப்ருக்ருத்யா" "நப்ராண்ண நபார் நவேதா நஸத்ய நமுசி 'நகுல' நக நபும்ஸக நக்ஷத்ர நக்ர நாகேஷு ப்ரகிருத்யா" "த்ரோண" வவூத ஜீவ ஹாதந்ய தரஸ்யாம்—"துரோண" பர்வத ஜீவந்தா தந்ய தரஸ்யாம்" என்கிறவிடத்தில் துரோண சப்தம் காணப்படுகிறது. இதனால் அச்வத்தாமனைக் காட்டிலும் வேறொருவனும் குறிக்கப்படவில்லை. இவ்விதமாகப் பாண்டவர்களின் பெயர், குந்தி துரோணர் அசுவத்தாமன் இவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆதலால் கி. மு. ஆயிரத்திற்கு அதிகமான வருஷங்கட்குமுன் யுதிஷ்டிரர் முதலானவர்களின் வ்ருத்தாந்தமடங்கிய மஹாபாரதம் ப்ரசாரமாயிருந்ததென்று தெரிகிறது.

மேலும் "வாஸுதேவார்ஜுநாப்யாம்" வாறு. "வாஸுதேவார்ஜுநாப்யம்" வுந். இந்த பாணிநி ஸூத்ரத்திற் கண்ட வாசுதேவ அர்ஜுந சப்தங்கட்கு வாஸுதேவரின் உபாஸகன் அர்ஜுனனின் உபாஸகன் என்ற பொருள் கிடைக்கிறது. ஆகையால் பாணிநி ஸூத்ரங்கள் இயற்றிய காலத்திற்கு முன்பாகவே கிருஷ்ணார்ஜுனர்கள் தேவதைகளாகக் கொள்ளப்பட்டார்கள். இவ்விடத்தில் இதைத்தவிர ஆஸ்வலாயன் ஸாங்க்யாயந க்ருஹ்ய ஸூத்ரங்களில் மஹாபாரதத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆகையால் மஹாபாரதம் மிகவும் ப்ராசீனமான தென்கிற விஷயத்தில் எவரும் எவ்வித ஆக்ஷேபணை செய்யமுடியாது.

ஆருவது அதிகாரம்.

ஸ்ரீகிருஷ்ணனென்ருெருவர் இருந்தாரா? பாணினிக்ரந்தத்தில் கிருஷ்ணனின் பெயர் இருக்கிறதா? இல்லையா? என்று விசாரிக்கத் தேவையில்லை. ஏனென்ருல் ருக்வேத ஸம்ஹிதையில் கிருஷ்ணன் என்கிற சப்தம் காணப்படுகிறது. முதலாவது மண்டலம் 115 ஸூக்தம் 23 வது ருக்கிலும் 119 ஸூக்தம் 9 வது ருக்கிலும் கிருஷ்ணனுடைய பெயர் காணப்படுகிறது. அதில் குறிப்பிட்டிருக்கும் கிருஷ்ணன் யார்? என்று நிச்சயஞ்செய்ய முடியவில்லை. இவர் வசுதேவர் புதல்வரென்று நிச்சயித்தல் பொருந்ாது. ருக்வேதத்தில் அநேக ஸூக்தங்களில் இருடிகள் கிருஷ்ணனெனப் பெயர் வாய்ந்தவர்கள் குறிக்கப்பட்டுளது. அதர்வ ஸம்ஹிதையில் கிருஷ்ண கேசி யென்கிற அசுரனைவதைத்த கிருஷ்ணனின் கதை யிருக்கிறது. இவர் வசுதேவரின் புதல்வரான கிருஷ்ணனேயென்பதில் ஐயமில்லை.

பாணினி சூத்திரத்தில் வாசுதேவ னென்கிற பெயர் காணப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணன் மஹாபாரதத்தில் அநேக இடங்களில் வாசுதேவனென்று குறிப்பிடப்பட்டிருக்கிருர். ப்ரபல சாஸ்திரங்களுக்குள் தருமபீடகம் என்பது எல்லாப் பௌத்த க்ரந்தங்களைக் காட்டிலும் பழமையானது. அதிலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பெயர் காணப்படுகிறது.

இது நிற்க, ஸாந்தோக்யோபநிஷத்திலோர் கதை யிருக்கிறது. அஃதாவது:— ஆங்கிரச வம்சத்தில் கோரனென்ற பெயருள்ள ஓர் ரிஷி தேவகி புத்திரனுன கிருஷ்ணனுக்கு ஒருகதை சொன்னுர். இக்கோர ரிஷியின் புதல்வனுகிய கண்வரிஷியானவர் ருக்வேதத்தில் அநேக சூக்தங்களில் ரிஷியாகக் காணப்படுகிருர். கோரரின் சிஷ்யராகிய கிருஷ்ணன் அவர் காலத்தியவரென்பதில் சந்தேகமில்லை. ருக்வேத ஸம்ஹிதை 8-வது மண்டலத்திலும், 10-வது மண்டலம் 42, 44 சூக்தங்களிலுமுள்ள ரிஷி கிருஷ்ணன் இந்த கிருஷ்ணன் தேவகி நந்தனனுகிய கிருஷ்ணனே அல்லவோ யென்று நிச்சயிக்க முடியவில்லை. ஆனல் கிருஷ்ணன் க்ஷத்திரியனுனதால் சூக்தங்களுக்கு ரிஷியாக இருந்திருக்க முடியாதென்பது பொருந்தாது.

எனெனில், ‘‘த்ரஸதஸ்யு த்ர ரணவம்ரசீய ப்ரஜசீய ஸிம் யாஜீவ ஸாஷாஸ ஶாஸாதா ஶிவீ ப்ரதட்நத கக்ஷிவாநு’’ முதலியவர்கள் க்ஷத்திரியர்களாயிருந்தும் ஸூக்தத்தின் ரிஷிகளாய்க் காணப்படுகிருர்கள். மேலும் இரண்டொரு இடத்தில் ஸூத்திரரும் கூட ரிஷியாகக் காணப்படுகின்றனர். 10-வது மண்டலத்தில் கவஷன் என்கிற ஸூத்திரரிஷி காணப்படுகிருர். ஆகையால் ரிஷி என்பதால் க்ஷத்ரியனுனகிருஷ்ணன் ரிஷியாயிருக்க முடியாதென்பது ந்யாயமில்லை. ருக்வேத ஸம்ஹிதையின் அநுக்ரமணிகையிலிருந்து சௌநக கிருஷ்ணர் ஆங்கிரசரிஷி யென்று தெரியவருகிறது.

உபநிஷத்துக்களெல்லாம் வேதங்களின் கடைசி பாகங்கள். ஆதலாலேயே அவைகளுக்கு வேதாந்தம் (வேதமுடிவு) எனப் பெயர் உண்டாகியது. வேதங்களின் அம்சங்களான ப்ராம்மணங்கள் இவ்வுபநிஷத்துக்களுக்கு முந்தினவைகள். ஆகையால் சாந்தோக்யோபநிஷத்தைக்காட்டிலும் கௌஷீதகி பிராம்மணம் முந்தியது. அதிலும் ஆங்கிரசகோரருடையபெயர் காணப்படுகிறது. கிருஷ்ணனுடைய பெயரும் காணப்படுகிறது. அவ்விடத்தில் கிருஷ்ணனை தேவகி நந்தனனென்று குறிப்பிடவில்லை. ஆங்கிரஸனென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. க்ஷத்திரியர்களில் அநேக ஆங்கிரசர் என்று பிரஸித்தி பெற்றிருக்கிருர்கள்.

> ஸமெத்க்ஷத்ர ப்ரஸூதாமெவ
> வாநஶ்வாம்ஶிரஸ: ஸ்ம்ருதா:।
> ரதீதராணம் ப்ரவரா:
> க்ஷத்ரோமெதாத்விஜாய தய:॥ 8—2—2.

இந்த ரதீதரராஜா ஸூரியவம்சத்தோன். கிருஷ்ணனின் பூர்வபுருஷன் யது! யயாதியின் புதல்வன்! சந்திரவம்சத்தோன். அக்கதைகளெல்லாம் ஹரிவம்சம் விஷ்ணு பர்வத்தில் காணப்படுகின்றன. மதுரையின் யாதவர்கள் இக்ஷ்வாகுவம்சத்தோர் என்று ஹரிவம்சத்திலேயே காணப்படுகிறது.

"ஏவம் இக்ஷ்வாகுவம்ஶாத்து யதுவம்ஶ: விநிஸ்ருத:" என்று இது பொருந்தக்கூடியதாயிக்கிறது. ஏனெனில் இக்ஷ்வாகு வமிசத்தவரான ஸ்ரீராமனுடைய இளைய சகோதரனான சத்துருக்கனன் மதுரையை ஜயித்தானென்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

அது எவ்விதமிருந்தாலும் இருக்கட்டும் "வாஸுதேவார்ஜுனாப்யாம் வுந்" என்கிற சூத்திரத்தை நாம் பாணினியத்திலிருந்து உதாஹரித்துக் காட்டினோம். பாணினி காலத்தில் உபாஸ்ய தேவதையாக ஸ்ரீகிருஷ்ணன் கருதப்பட்டாரென்பதினாலேயே அவர் வெகுகாலத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டுமென்பது நிச்சயம்.

ஏழாவது அதிகாரம்.

மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்கள்.

நாம் இதுவரை சொல்லிவந்ததிலிருந்து மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்களும் இருக்கின்றன; கிருஷ்ண பாண்டவ ஸம்பந்தமான உண்மையான கதைகளும் இருக்கின்றனவென்று வெளியாகும். ஐரோப்பியர்கள், மஹாபாரதமென்று ஒரு க்ரந்தம் ஆதியிலிருந்தது; ஆனால் இப்பொழுது காணப்படும் மஹாபாரதம் அதல்ல; தற்காலத்தில்காணப்படும் மஹாபாரதத்தில் ப்ராசீன பாரதத்தில் கண்ட விஷயங்கள் ஒன்றுமில்லை; என்று நினைக்கிறார்கள். ஆதியில் மஹாபாரதம் சிறிதாயிருந்து பிறகு அநேக ப்ரக்ஷிப்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டால் நமக்கு யாதொரு விவாதமுமில்லை. மஹாபாரதத்தில் காணப்படும் உண்மையான சரித்திரம் ஆதி மஹாபாரதத்தைச் சேர்ந்தது. ஆகையால் தற்காலங் காணப்படும் மஹாபாரதத்தில் ஆதிமஹாபாரதத்தில் சேர்ந்த விஷயங்களெவை யென்று விசாரிக்கப்புகுவாம். அதில் ஸ்ரீகிருஷ்ணனுடைய கதை எவ்வளவு காணப்படுகிறதோ அதெல்லாம் மஹாபாரதத்தைச் சேர்ந்தது. மஹாபாரதமே ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றி கூறுகிற க்ரந்தங்கள் யாவற்றிலும் ப்ராசீனமானது. மஹாபாரதத்தில் சில அம்சங்கள் ப்ரக்ஷிப்தங்கள் எனச் சொல்வதற்கு யாது ப்ர

மாணமென சிலர் வினவக்கூடும். இவ்வதிகாரத்தில் சில ப்ரமாணங்களைக் காட்டுவோம். ஆதிபர்வத்தின் 2-வது அத்தியாயத்தின் பெயர் பர்வஸங்க்ரஹாத்யாயம். மஹாபாரதத்தில் கண்ட விஷயங்களெல்லாம் இவ்வத்யாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஷ்டி அத்யாயத்தை மஹாபாரதத்தின் அட்டவணை யென்று சொல்லலாம். இவ்வத்யாயத்தில் காணப்படாத வேறு விஷயங்கள் ப்ரக்ஷிப்தங்களெனத் துணிவாய்ச் சொல்லலாம். ஓர் உதாரணம் காண்பிப்போம். ஆச்வமேதிகபர்வத்தில் அநுகீதை யென்றும் ப்ராமணகிதை யென்றும் இரண்டு பெரிய விஷயங்கள் இருக்கின்றன. இவைகள் பர்வ சங்க்ரகாத்யாயத்தில் காணப்படவில்லை. ஆகையால் இவைகளை ப்ரக்ஷிப்தங்கள் என்று சொல்லத்தடையென்ன?

அநுக்ரமணிகாத்யாயத்தில் மஹாபாரதத்தில் லக்ஷம் சுலோகங்கள் உளவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பர்வஸங்க்ரஹாத்யத்தில் இன்னின்ன பர்வங்களில் இவ்வளவு இவ்வளவு ஸ்லோகங்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆதிபர்வத்தில் 8880 என்றும், ஸபாபர்வத்தில் 2511 என்றும் இது போன்றே மற்ற பர்வங்களிலும் இவ்வவ்வளவென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சேர்த்தால் லக்ஷம் சுலோகம் ஆகவில்லை 84836 சுலோகங்களே ஆகின்றன.

அஷ்டாதஶைவமுக்தானி
பர்வாண்யேதாந்யஶேஷத꞉ ।
விஸ்தரேண ஹரிவம்ஶஞ்ச
பவிஷ்யஞ்ச ப்ரகீர்திதம் ॥

தஶஶ்லோகஸஹஸ்ராணி
விம்ஶச்ச்லோகஶதானி ச ।
விஸ்தரே ஹரிவம்ஶேऽபி
ஸம்க்யாதானி மஹர்ஷிணா ॥

பொருள்:—இவ்விதமாக பதினெண்பர்வங்களும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டன. இவைகளின் பிறகு ஹரிவம்சமும் பவிஷ்யபர்வ

மும் சொல்லப்பட்டிருக்கிறது. மஹரிஷியானவர் ஹரிவம்சத்தில் பன்னீராயிரம் சுலோகம் கணக்கிட்டிருக்கிறார். தற்காலத்திலிருக்கிற மஹாபாரதத்தில் ஒவ்வொரு பர்வங்களிலும் முன் சொன்ன தொகையைக் காட்டிலும் அதிகமாக சுலோகங்கள் காணப்படுகின்றன. இவ்விதமாக சுலோகங்கள் பெருக்கப்பட்டனவென்று ஒரு உதாரணம் காட்டுவோம் அநுக்ரமணிகாத்யாயத்தில் 102ம் சுலோகத்தில் வியாசர் 150 சுலோகங்களுள்ள அநுக்ரமணிகையெழுதினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

> தபோSத்யர்த்தம் ஸதம் பூய:
> ஸம்க்ஷேபம் க்ருதவாந்ருஷி: ।
> அநுக்ரமணி காத்யாயம்
> வ்ருத்தாந்தாநாம் ஸபர்வணாம் ॥

தற்காலத்திலிருக்கிற மஹாபாரதத்தின் அநுக்ரமணிகாத்யத்தில் 272 சுலோகங்கள் காணப்படுகின்றன. ஆகையால் பர்வஸங்க்ராத்யாயம் எழுதப்பட்ட பின் இந்த அநுக்ரமணிகாத்யாயத்தில் 122 சுலோகங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மஹாபாரதம் ஆதியில் உபாக்யானங்களைத் தவிர 24000 சுலோகங் கொண்டதாயிருந்தது. அதை வேதவியாஸர் தன் புதல்வரான சுகருக்கு அத்யயனம் செய்து வைத்தாரென்று அநுக்ரமணிகாத்யத்தில் கூறப்பட்டிருக்கிறது.

> "சதுர்விம்ஸதி ஸாஹஸ்ரீம்
> சக்ரே பாரத ஸம்ஹிதாம் ।
> உபாக்யானைர்விநா தாவத்
> பாரதம் ப்ரோச்யதே புதை: ॥
> ததோத்யர்த்தம் ஸதம் பூய:
> ஸம்க்ஷேபம் க்ருதவாந்ருஷி: ॥
> அநுக்ரமணிகாத்யாயம்
> வ்ருத்தாந்தாநாம் ஸபர்வணாம் ॥

ஊஃம்ஜெஃவாயநஃ வஈிவஃம்
வாத்ருஃபாவயஃ ஶாகம்
தஜெதாzஜெந்ரஜெஹ்ராzநா ரஈிவெஹிஃ
ஶஜெஷ்ரஹ்ரஃ ஶ்ரூஃஃள விஹாஃ ||
ஞூஃவவஃ 1—1—103.

ஆரம்பத்தில் 24000 சுலோகங் கொண்ட கிரந்தமாயிருந்து பின்னால் ப்ரக்ஷிப்தங்களைச் சேர்த்து அதற்கு நான்கு மடங்கதிகமாகப் பெருக்கப்பட்டது. வேதவியாசர் அறுபதுலக்ஷம் சுலோகங்கொண்ட மகாபாரதத்தை யியற்றினர். அதில் சிலபாகம் தேவலோகத்திலும், மற்றுஞ்சில பாகம் பிதிரு லோகத்திலும், வேறுசில பாகம் கந்தருவ லோகத்திலும், ஒரு லக்ஷம் கிரந்தங்கொண்ட பாகம் மாத்திரம் மனித உலகத்தில் படிக்கப்பட்டு வருகிறதென்றுங் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமாகச் சொல்லுதல் அநுக்ரமணிகாத்பர்யத்தின் மத்தியில் ப்ரக்ஷிதங்களாகப் புகுந்திருக்கிறது. இதர லோகங்களில் காணப்படுவதாகச் சொல்லப்படும் சுலோகங்களால் நமக்குப் பயனென்ன?

இவ்விதமான பிரக்ஷிப்தங்களென பலவித ஆதாரங்களால் கண்டுபிடிக்கப்பட்ட பாகங்களை தவிர்த்து மற்ற பாகங்களில் ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் குறித்த விஷயங்களைப்பற்றி யாராய்வோம்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு
சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(16-ம் பக்கத்தொடர்ச்சி.)

இனி, விதவைகளுடைய வபநநிஷேதம் நிரூபிக்கப்படும்:—

"வியவாகவரீவாஃ ஹதரஃவாஸாயஜாயதே। ஶிரஸொஊணநம் தஸ்யாஃ காயஃம் வியவயாவஹா" "விதவாகபரீபந்த:

பர்த்ருபந்தாயஜாயதே, சிரஸோமுண்டநம் தஸ்மாத் கார்யம் விதவயாஸதா" என்று வைகுண்டநாதீயத்திலும்,

"𑌹𑌰𑌿𑌸𑍇𑌵𑌾𑌵𑌿𑌹𑍀𑌨𑌾𑌯𑌾 𑌵𑌿𑌧𑌵𑌾𑌕𑍇𑌶𑌧𑌾𑌰𑌿𑌣𑍀। 𑌉𑌪𑌵𑌾𑌸𑌵𑌿𑌹𑍀𑌨𑌾𑌯𑌾 𑌵𑍍𑌰𑌤𑌹𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌿𑌦𑍂𑌷𑌿𑌤𑌾" "ஹரிஸேவாவிஹீநாயா விதவாகேசதாரிணீ, உபவாஸவிஹீநாயா வ்ருதஹாநாத்விதூஷிதா" என்று சேஷதர்மத்திலும்,

"𑌮𑌾𑌸𑌕𑍇𑌶𑌾𑌂𑌤𑍁 𑌵𑌿𑌧𑌵𑌾 𑌮𑌾𑌵𑌿𑌕𑍇𑌶𑌾 𑌸𑌭𑌰𑍍𑌤𑍃𑌕𑌾। 𑌮𑌾𑌵𑍍𑌰𑌤𑍀𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌦𑌾𑌕𑍇𑌶𑍀 𑌮𑌾𑌰𑌣𑍍𑌯𑍋 𑌨𑌗𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌃, 𑌮𑌾𑌧𑌨𑍀𑌚 𑌅𑌪𑍍𑌰𑌦𑌾𑌤𑌾𑌮𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇 𑌵𑌸𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌘𑍃𑌣𑌃" "மாஸகேசாந்து விதவா மாவிகேசா ஸபர்த்ருகா, மாவ்ருதீஸ்யாத் ஸதாகேசீ மாரண்யோ நகராச்ரய:, மாதநீச அப்ரதாதாமே ராஜ்யே வஸது நிர்க்ருண:" என்று நாரதீயத்திலும் சொல்லப்பட்டிருப்பதால் விதவைகளுக்கு கேசதாரணம் கூடாதென்று ஏற்பட்டிருந்தபோதிலும்,

"𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌨𑍃𑌪𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇। 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌯𑌦𑌿 𑌸𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌵𑌪𑌨𑌂 𑌨𑍈𑌵𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍" "வித்வத்விப்ரந்ருபஸ்திரீணும் வபநந்து நிஷித்யதே முமுக்ஷுர்யதி ஸாதஸ்யா: வபநம் நைவகாரயேத்" என்றும், ககேசுவர ஸம்ஹிதையில், "𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌸𑌕𑍍𑌤𑌾 𑌵𑌿𑌧𑌵𑌾𑌵𑌾𑌪𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌰𑌃। 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌯𑌦𑌿𑌸𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌵𑌪𑌨𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌷𑌿𑌧𑍍𑌯𑌤𑍇' "ப்ரயோஜநாந்தராஸக்தா விதவாவாபயேச் சிர:, முமுக்ஷுர் யதிஸாதஸ்யா: வபநம்து நிஷித்யதே" என்றும் சொல்லப்பட்டிருப்பதால், வித்வான்களாயிருக்கிற ப்ராஹ்மணர்களுடைய ஸ்திரீகள், ராஜஸ்திரீகள் இவர்களுக்கு வைதவ்யம் நேர்ந்தால் வபநம் வேண்டியதில்லையென்றும், முமுக்ஷுக்களான ப்ரபந்ந ஸ்திரீகளுக்கும் வபநம் வேண்டியதில்லையென்றும் ஏற்படுகிறது. இதனுல் கீழ்ச்சொல்லிய வபநவிதாயக வசநங்கள் அமுமுக்ஷு விஷயமென்றறிய வேண்டும்.

இப்படியே, வாசிஷ்ட ஸம்ஹிதையில், "𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌿 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌚𑍇𑌤𑍍 𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌵𑌿𑌧𑌵𑌾𑌸𑌤𑍀, 𑌕𑍍𑌷𑍌𑌰𑌕𑌰𑍍𑌮 𑌨𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌹𑌮𑌵𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍" "𑌨𑌕𑌰𑍋𑌤𑌿 𑌯𑌦𑌾𑌕𑍍𑌷𑍌𑌰𑌂 𑌕𑍇𑌵𑌲𑌾𑌵𑌿𑌧

வாயதி, தாம் த்யஜேதவரோஷ்ட்ரே வதிதாம் பாவகாரிணீம்।"

"சரணாகதி நிஷ்டாசேத் ப்ரபந்நாவிதவாஸதீ, க்ஷௌரகர்ம நகுர்யாத் ஸா பகவத்த்ரோஹிணீ பவேத்" "நகரோதி யதாக்ஷௌரம் கேவலா விதவாயதி, தாம்த்யஜேதபரோராஷ்ட்ரே பதிதாம்பாப காரிணீம்" என்ற வசனங்களால் சரணாகதி நிஷ்டைகளான ஸ்திரீகளுக்கு வபநம் வேண்டியதில்லையென்றும், கேவல விதவைகளுக்கு வபநம் ஆவசியகமென்றும் சொல்லப்பட்டுள்ளன.

"வித்வத்விப்ரந்ருபஸ்திரீணாம்" என்கிற சுலோகத்தில் விதவைகளான ராஜஸ்திரீகளுக்கு வபநம் கூடாதென்பதை அநுஸரித்து ஆப்ததமனுன போஜராஜா போஜசம்புவில், "வைதவ்யோசித வேஷநிஶ்சித மநோலங்காவதூஜடாம்" "வைதவ்யோசித வேஷநி:ச்சித மநோலங்காவதூஜடாம்" என்று ஹநுமான் லங்காதஹநம் பண்ணுகிறகாலத்தில் உண்டான தூமஸமூஹத்தை வைதவ்யத்திற்கு அநுகுணமான வேஷத்தில் நிச்சயத்தையுடைய லங்கையாகிய ராஜஸ்திரீயின் ஜடையாகச் சொல்லியிருக்கிறார். ஆதலால் அந்த ராஜஸ்திரீகளோடு சேர்த்துச் சொல்லியிருக்கிற வித்வத்விப்ரஸ்திரீகளுக்கும் வபநம் கூடாதென்பது ஸித்திக்கிறது. வித்வத்விப்ரர்கள் கீழ்ச்சொல்லப்பட்டுள்ள வசனப்படி சரணாகதி நிஷ்டர்களென்று அறியத்தக்கது.

இனி ஸ்திரீ சூத்திரர்களுக்கு ப்ரணவத்தோடே கூடின மூலமந்திரத்தின் உச்சாரணம் கூடுமென்னும் விஷயம் விசாரிக்கப்படும்.

ப்ரணவரஹிதமான மூலமந்த்ரத்தில்தான் ஸ்திரீ சூத்திரர்களுக்கு அதிகாரம் என்று சில ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய அபிப்ராயம். அதற்கு ப்ரமாணம்.—"நஸ்வர: ப்ரணவோங்காநி நாப்யந்ய விதயஸ்ததா। ஸ்த்ரீணாந்து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்திரிஷ்யதே। தத்ர உத்தாரயண ஸ்யாதி: பிந்துநாதௌ விஷர்ஜநந்த:। பீஜஷஷ்டாக்ஷரஸ்யாஸ்ய தேநாஷ்டாக்ஷரதா ஸ்ம்ருதா" "நஸ்வர: ப்ரணவோங்காநி நாப்யந்ய விதயஸ்ததா, ஸ்த்ரீணாந்து சூத்ரஜாதீநாம் மந்த்ரமாத்ரோக்தி ரிஷ்யதே, தத்ர உத்தாரயண ஸ்யாதி: பிந்து

மாந்விஷ்ணுரந்தத: பீஜமஷ்டாக்ஷரஸ்யஸ்ய தேநாஷ்டாக்ஷரதா ஸ்ம்ருதா" என்பதாம். இதற்கு அர்த்தம்—ஸ்வரம், ப்ரணவம், அங்கங்கள் வேறு விதிகள் இவைகள் ஸ்த்ரீ சூத்ரர்களுக்குக் கூடாது; நாராயண பதத்தில் "நார" "அயன" என்கிற இடத்தில் அந்த உத்தரபதாதியான அகாரம் அநுஸ்வாரத்தோடே கூடியதாய்க்கொண்டு திருமந்த்ரத்துக்கு பீஜமாகிறது; ப்ரணவத்தைவிட்டு அந்த பீஜபூதமான 'அம்'என்கிறதோடு சேர்த்து 'அம் நமோநாராயணாய' என்கிற அஷ்டாக்ஷரத்தில் ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அதிகாரம். ப்ரணவஸ்தாநத்தில் அகாரமும் மகாரமும் ஏற்பட்டிருக்கிறபடியால், "ஸவ௨ம் வாக்ஸ்ம் ஸாவயாரணம்" "ஸர்வம் வாக்யம் ஸாவதாரணம்" என்கிற நியாயத்தாலே ஏவகாரஸ்தாநீயமான உகாரார்த்தத்தோடே கூடின அநந்யார்ஹ சேஷத்வம் ஏற்படுகிறது. இத்தை அநுஸரித்தே ப்ரபந்தங்களிலும் புராணங்களிலும் ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு ப்ரணவரஹிதமான மந்த்ரோச்சாரணமே சொல்லப்பட்டிருக்கிறது.

வராஹபுராணத்தில் கைசிகமாஹாத்மியத்தில் "நமோ நாராயணேத்யுக்த்வா சுவபாக: புநராகமத்" "நமோநாராயணேத்யுக்த்வாச்வபாக: புநராகமத்" என்று நம்பாடுவான் ப்ரணவமில்லாமலேயே உச்சரித்ததாகச் சொல்லியிருக்கிறது.

பெரியாழ்வாரும் "நாடுநகரமு நன்கறிப் நமோநாராயணாய" என்றும், "நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோநாராயணாய" என்றும், தம்முடைய ப்ரபந்தங்களில் ஸ்த்ரீசூத்ரர்களுக்கும் அதிகாரமிருப்பதால் ப்ரணவத்தைவிட்டே அருளிச்செய்திருக்கிறார். இதனை மற்ற ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளிலும் கண்டுகொள்ளலாம். இன்னும் "வைதிகம் ப்ராஹ்மணாநாம் ஸ்யாத் ராஜ்ஞாம் வைதிகதாந்த்ரிகம்। தாந்த்ரிகம் வைச்ய சூத்ராணாம்" "வைதிகம் ப்ராஹ்மணாநாம் ஸ்யாத் ராஜ்ஞாம்வைதிக தாந்த்ரிகம், தாந்த்ரிகம்வைச்ய சூத்ராணாம்" என்றும் "ப்ரணவேநவிஹீநாஸ்து தாந்த்ரிகா ஏவ கீர்த்திதா:" ப்ரணவேநவிஹீநாஸ்து தாந்த்ரிகா ஏவ கீர்த்திதா:" என்றும் சொலலப்பட்டன என்பர்.

இதற்கு சமாதாநம்.—

தாந்த்திரிகமான மந்த்ரம் ப்ரணவரஹிதமான மந்த்ரம்போலே ஸ்வரவிஹீநமான ப்ரணவத்தோடே கூடின மந்திரமும் தாந்திரிக மந்த்ரமேயாம். "ஸர்வேஷாம் தாந்த்ரிகஸ்த்வா" "ஸர்வேஷாம் தாந்த்ரிகந்துவா" என்றும், "வைஶ்யஶூத்ராணாம்" "வைச்ய சூத்ராணும்" என்றும், த்ரைவர்ணிகர்களானவைசியர்களையும் சேர்த்துச் சொல்லியிருப்பதால் ஸ்வரரஹித ப்ரணவத்தோடே கூடின மந்த்ரமே தாந்த்ரிகமென்றுகொள்ளவேணும். மேலும்,

"ஓமித்யேகாக்ஷரம் நம இதி த்³வே அக்ஷரே" "ஓமித்யே காக்ஷரம் நம இதி த்வே அக்ஷரே" என்று ப்ரணவத்தோடே கூடியே மந்த்ரத்துக்கு அஷ்டாக்ஷரத்வம் சொல்லியிருப்பதால். அந்த அஷ்டாக்ஷரத்தில் முமுக்ஷுக்களான ஸ்த்ரீ சூத்திரர்களுக்கும் அதிகாரம் உண்டு என்று கொள்ளவேணும். இப்படியன்றிக்கே மந்த்ரஸாமாந்யத்தை ப்ரணவத்தோடே சேர்த்து அநுஸந்திக்கிற கிரமத்தைப்பற்றிப் பார்த்தால் அந்த மந்த்ரஸாமாந்யத்துக்கும் ஆகந்துகமான ப்ரணவத்தினுடைய அநுஸந்தானம் கூடாதென்றுகொள்ளவேண்டும். "ஓ...மாத்ரோச்சாரிஷ்யதே" "மந்த்ர மாத்ரோக்திரிஷ்யதே" என்கிற வசனப்படி மந்த்ரத்தைமட்டும் சொல்லலாம் என்றேற்படுகிறபடியால் ப்ரணவத்தோடு கூடிய மூலமந்த்ரமே மந்த்ரமாகையால் அந்த வசனமானது நைஸர்க்கிக ப்ரணவயுக்த மூலமந்த்ர விஷயமன்று.

மேலும் அநுபநீதனான த்ருவனுக்கு நாரதர் த்வாதசாக்ஷரத்தை உபதேசிக்கிற கிரமத்தைச் சொல்லுகிறபாகவதத்தில் "ஓம் நமோ பகவதே வாஸுதேவாய" என்று உபதேசித்ததாகச் சொல்லியிருக்கிறது.

ஹரிவம்சத்தில் கண்டாகர்ணன் அத்யந்தம் சூத்ராதி ஜாதிகளைக்காட்டிலும் நிக்ருஷ்டமான பிசாசு ஜாதியிற் பிறந்திருக்கச் செய்தேயும் ப்ரணவஸஹிதமான த்வாதசாக்ஷரத்தை உச்சரித்ததாகச்சொல்லியிருக்கிறது.

அநுபநீதர்களான பாலர்களுக்கு அக்ஷராப்யாஸகாலத்தில் "ஓம் நமோநாராயணாய" என்று அக்ஷராப்பியாஸம் பண்ணுவிக்கிறார்கள். ஆதலால் நிஷேதம் ஸ்வரயுக்த ப்ரணவவிஷயமாகவும், ஆகந்துக ப்ரணவஸஹித மந்த்ரவிஷயமாகவும் கொள்ளவேணும்.

"தாவஃ வுண்ஸ்ரஜஸ்தா நாஃ ஃஜெஹ்ராயாமஹ் வஞ்சஃ"

"தாப: புண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோயாக:ச்ச பஞ்சம:" என்று மந்த்ரத்தோடே ஸஹபடிதமான யாகத்தில் அதிகிருதர்களான ஸ்த்ரீ சூத்ரர்களுக்கும் யாகோபயுக்த மந்த்ரோச்சாரணம் ரதகாராதிகரண ந்யாயத்தாலேகூடும். மேலும், அத்யயநவிதி அத்ருஷ்டார்த்தமாகையாலே அந்த அத்யயன நிஷேதமும் அத்ருஷ்டார்த்தமாகவே கொள்ளவேணும். ஸ்த்ரீ சூத்ரர்களுக்கு அர்த்தபஞ்சகஜ்ஞானரூபமான த்ருஷ்டார்த்தம் பலமாகையாலே அது நிஷேதத்துக்கு விஷயமன்று.

மேலும், திருமங்கையாழ்வார் "மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடு" என்கிற பாசுரத்தில் ஸர்வேசுவரனிடத்தில் நின்றும் அஷ்டாக்ஷரத்தைத்தாம் பெற்றதாக அருளிச்செய்திருப்பதால் அந்த அஷ்டாக்ஷரம் சுருதிஸித்தமாகையால் ப்ரணவஸஹிதமாகவேகொள்ளவேணும். இத்தையநுஸரித்தே பராசரஸம்ஹிதையில் "ஸதாப்ரணவஸம்யுக்தம் மூலமந்த்ரத்வயாதிகம் வேதஸ்வராதிவர்ஜம் ஸ்யாத் ஶூத்ராணாம் மந்த்ரஜாபநே" "ஸதாப்ரணவஸம்யுக்தம் மூலமந்த்ரத்வயாதிகம், வேதஸ்வராதிவர்ஜம் ஸ்யாத் சூத்ராணும் மந்த்ரஜாபநே". என்று ஸ்வரஸஹிதமான மந்த்ரோச்சாரணம் கூடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

"தாராதிர் முக்தயே ததா பீஜாதிர் புக்தயே ததா" "தாராதிர் முக்தயெததா, பீஜாதிர்ப்புக்தயேததா" என்று சொல்லியிருக்கிறபடியால் முமுக்ஷுக்களான ஸ்திரீ சூத்திரர்களுக்கு ப்ரணவ ஸஹிதமான மந்த்ரோச்சாரணம் கூடும். ஆதலால் ஸ்வரஸஹிதமான மந்த்ரோச்சாரணம் கூடும். ப்ரணவோச்சாரண நிஷேத வசனம் அமுமுக்ஷு விஷயமாதல் ஸ்வரயுக்த ப்ரணவ விஷயமாதல் கொள்ளவேணும். இனி, பாகவதோச்சிஷ்டாசந விஷயம் நிரூபிக்கப்படும்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

சாந்தோக்யோபநிஷத்தில் இந்த நசிகேதஸின் வரலாறு விரிவாக உரைக்கப்பட்டுள்ளது. இவ்வரலாறு பலதர்ம ஸூக்ஷ்மங்களையறிதற்கிடமாயும், பயில்வோர்கட்கும் கேட்போர்கட்கும் உத்ஸாகத்தை விளைப்பதாயுமிருப்பதால் உபநிஷத்திற் கண்டபடி இவ்வுபாக்யானம் விரிவாக ஈண்டுரைக்கப்படுகிறது.

*வாஜச்ர்வஸ் என்ற ஒரு மஹரிஷி யிருந்தார். இவர் அன்னதானம் செய்வதே முக்ய தருமமாகக் கொண்டு தம் வாழ்நாளைக்கழித்து வந்தாராதலால் அப்பெயர் பெற்றார். இவருடைய அருமைப் புதல்வர் நசிகேதஸ். இவர் விசுவஜித் என்றயாகத்தைச் செய்து பூர்த்தி செய்தவர். இவர் செய்தயாகத்தில் வாஸிஷ்டர் *பிர்ம்மாவாகவும், செவனர் § அத்வர்யுவாயும், கச்யபர்† ஹோதாவாயுமிருந்தார்கள். இவர்களுக்குள் செவனரும் கச்யபரும் வாஸிஷ்டரை நோக்கி ஸ்வாமி! உத்தாலகரால் செய்யப்பட்ட விசுவஜித் என்ற யாகத்தைப்பூர்த்தி செய்து வைத்தோம்; ஆனால் அந்தயாகத்தின் மஹிமையை அறிதற்கு ஆவலுடையவர்களாகவிருக்கிறோம்; அந்த மஹிமையை எடுத்துரைப்பதற்குத் தேவரீர் போல்வாரே தக்கவாராதலால் இதை யெடுத்துரைக்க வேண்டுகிறோம் என்றனர்.

---

* வாஜம்—அன்னம்: அதைக் கொடுப்பதாலுண்டாகிய, சிரவ:—கீர்த்தியானது எவனுக்கிருக்கிறதோ அவன் வாஜச்ரவஸ்.

பிர்ம்மா என்பவன் ஹோதா, உத்காதா, அத்வர்யு என்ற யாக கார்யங்களைச் செய்பவராகிய இம்மூவரும் செய்யுங்காரியம் செவ்வனே யிருக்கின்றதா வென்று கவனித்துக் கொண்டிருப்பவனாவான்.

§ அத்வர்யு என்பவன் யஜ்ஞாரம்ப காலமுதல் முடியும் வரை ஒவ்வொரு காரியத்திற்கு வேண்டும் சாதனங்களை சித்தப்படுத்தி யஜ்ஞத்தை முறையாக நடத்துவிப்பவனாவான்.

வாஸிஷ்டர்- இந்த விசுவஜித்தென்ற யாக விசேஷத்தைக் குறித்து நீங்கள் வினவியதைப் பற்றிச் சந்தோஷிக்கிறோம்; இதைப் பற்றிச் சொல்லவேண்டிய விஷயங்கள் பலவுண்டு. கேட்பீராக:— % ஒருவன் பிறக்கிறகாலத்தில் மூன்று கடனுடன் பிறக்கின்றான். அவையாவன:— தேவர்கடன், ருஷிகடன், பிதுரர் கடன் என்பனவாம். இவற்றுள் தேவர் கடன் வேள்வியானும் ருஷிகடன் பிர்ம்மசரிய விரதானுஷ்டானத்தானும் பிதுரர் கடன் நல்லபுதல்வரைப் பெறுதலானும் தீர்க்கத்தக்கனவாம். யாகம் முதலியவற்றை நேரே செய்தற்கதிகாரமில்லாதவர்கள் இவற்றை அந்தணர் மூலமாகச் செய்தொழிக்கவேண்டும். இவ்வாறு செய்யாதொழிவானேல் அவன் கடனுடையவனுகவே யாவன். முதற் கடனுகிய யாகஞ் செய்வதில் மற்றொரு ப்ரயோஜனமு முண்டு. அந்த யக்ஞம் பல வகைப்படும்.

கச்யபர். யக்ஞம்பலவகைப்படுமாயின் அவற்றின் விவரங்களையும் தேவரீரே அருளிச் செய்ய வேண்டும்.

வாஸி. யக்ஞ மென்பனந்த இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை யாகம் ஓமம் என்பனவாம். யாகமாவது.— பிராணிகளின் வபை முதலியவைகளைக்கொண்டு ஓமம் செய்வதாம். ஓமமாவது.— தான்ய முதலிய திர்வியங்களாலாக்கிய அவியை அக்னியிற் பெய்வதாம். இவ்விரண்டிற்குள் சத்ரம் இஷ்டி சயனம் என்ற யாக விசேஷங்களையும் அடக்கி விடலாம். இவற்றுள் விசுவஜித் என்ற யாகமானது மிகவும் மேன்மை பொருந்தியது. ஆனல் மற்ற யாகங்களுக்கும் பலன்கள் கூறப்பட்டுள்ளன. இந்த யாகத்திற்கு ஒருபலனு முரைக்கப்

---

† ஹோதா வென்பவன் அந்தந்த தேவதைக் குரிய மந்திரங்களைச் சொல்லி அவியை (தேவருணவை) அக்கியில் ஹோமஞ் செய்யத்தக்கவன்.

% 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨𑌦𑍇𑌵𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌃 𑌏𑌷𑌵𑌾 𑌅𑌨𑍃𑌣𑌃”
“யஜ்ஞேநதேவேப்ய: ப்ரஜாபித்ருப்ய: ஏஷவா அந்ருண:” என்ற ப்ரமாணத்தாலு மறியலாம்.

படவில்லை. இந்த யாகமோ மிகுந்த பிரயாஸையாலும் அதிகமான பொருட் செலவாலும் செய்யத்தக்கதாயிருக்கிறது. இங்ஙனம் செய்யத்தக்க இதற்கு யாதொருபலனுங் கூறுவிட்டால் இதில் ஒருவரும் பிரவர்த்திக்கமாட்டார்களாதலால் இதற்கு ஸ்வர்க்கத்தையே ப்ரயோஜனமாகக் கூறுகிறோம்.

சேவனர். ஸ்வாமி! தேவரீர் அருளிச்செய்த விஷயத்தில் அடியேனுக்கு மிகுந்த ஸம்சயம் உண்டாகிறது. சாஸ்திரத்தில் இம்மைப்பயனை விரும்புகின்றவன் இன்னயாகத்தைச்செய்ய வேண்டுமென்றும் மறுமைப்பயனைவிரும்புகின்றவன் இன்ன யாகம் செய்யத்தக்கதென்றும் சொல்லப்பட்டுள்ளன. ராத்ரி சத்ரம் என்ற யாகத்திற்கு ஒருபலனும் சொல்லப்படவில்லை. இவ்வாறு ஒரு பலனும் சொல்லப்படாத இதற்கு எந்தப் பலனை கூறுவதென்று பெரியார்கள் ஆராய்ந்து முடிவுகூற வந்தவிடத்தில் "𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌫𑌲𑌕𑌤𑍍𑌵𑍇 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌫𑌲𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌅𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌾" "ஸம்பவதி த்ருஷ்ட பலகத்வே அத்ருஷ்ட பலகல்பநா அந்யாய்யா" (த்ருஷ்ட பலமாகிய இம்மைப் ப்ரயோஜனமிருக்க அத்ருஷ்டபலத்தைக் கற்பிப்பதுநியாயமாகாது.) என்ற ஞாயத்தை மேற்கொண்டு இதற்கு "𑌪𑍍𑌰𑌤𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌤𑌿 𑌹 𑌵𑌾 𑌯 𑌏𑌤𑌾 𑌰𑌾𑌤𑍍𑌰𑍀𑌰𑍁𑌪𑌯𑌨𑍍𑌤𑌿" "ப்ரதிஷ்டந்தி ஹவா யெ ஏதா ராத்ரிருபயந்தி" (எவர்கள் எந்த ராத்ரிசத்ரம் என்ற யாகத்தைச் செய்கிறார்களோ அவர்கள் இம்மையில் புகழ்படைகிறார்கள்) என்ற இம்மைப் பிரயோஜனத்தை கற்பித்தார்களன்றோ! அதுபோல இந்தவிசுவஜித் யாகத்திற்கும் இம்மைப் பலனையே பிரயோஜனமாகச் சொல்லவேண்டும்; அவ்வாறின்றி ஸ்வர்க்கபலத்தை இதற்குக்கூறுவது எவ்வாறு பொருந்தும்?

வாஸி. நீர் உரைத்தபடி பலன் சொல்லப்படாத ராத்ரிசத்ரம் என்ற யாகத்திற்கு இம்மைப்பலனைக் கற்பித்ததுபோல இந்த விசுவஜித் யாகத்திற்கு இம்மைப்பலனைக் கற்பிப்பது யுக்திக்குப் பொருந்தாததாகும். எவ்வாறெனின்; இந்த விசுவஜித் யாகமுடிவில் யாக கர்த்தாவானவன் தனக்குள்ள

ஸம்பத் முழுமையும் தானஞ் செய்துவிடுகிறான். இங்ஙனம் இம்மைப் பலனுகக்கருதப்படுகிற ஐசுவர்யங்களையும் ஒரு பொருட்படுத்தாமல் தானஞ் செய்துவிடுகிறவனுக்கு மறுபடியும் இம்மைப் பலனையே பிரயோஜனமாகக் கூறுவது சிறிதும் பொருந்ாது. ஆதலால் இதற்கு வேறோர் பிரயோஜனத்தை அவசியம் கற்பித்தாக வேண்டும்; அங்ஙனம் கற்பிக்கும்போது "𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌤𑍍" "ஸ்வர்க்கஸ்யாத் ஸர்வாந் ப்ரத்ய விசிஷ்டத்வாத்" (யாவராலும் விரும்பத்தக்கது ஸ்வர்க்கமே யாம்) என்றபடி நம் போன்றவர்கள் ஸ்வர்க்கபலத்தையே மோக்ஷமாகக் கூறுகிறார்கள். இவ்வாறன்றி இந்த ஸ்வர்க்கபலனும் நாசத்தையுடையதென்று வேதாந்திகள் இதைக்காட்டிலும் மேலான வாசுதேவருடைய ஸாரூப்யாதிகளை அடைவதே மோக்ஷமாகக் கூறுகிறார்கள். அதை யடைவதற்குப் பல காரணங்களுள. அவற்றுள் பக்தியும் ஒரு காரணமாகும். இதை உமக்கு மற்றொரு சமயத்தில் விரிவாக எடுத்துரைக்கிறேன். இப்பொழுது சூரியனும் உச்சிக்கு வந்துவிட்டான். இனிச்செய்யவேண்டிய மாத்யான்னிகக்கடனை முடித்துவிடுவோம். ஒருசமயம் வாஜசிரவஸ் நமக்கு யாகதக்ஷிணை கொடுக்க வருவார். அதற்குள் நாம் ஜாக்ரதையாக விருப்போம்.

சேவ. ஸ்வாமீ! தேவரீர் நியமித்தபடியே செய்வோம்.

இங்ஙனம் வாஸிஷ்டர் முதலானவர்கள் ஒருவர்க்கொருவர் உரையாடிக்கொண்டிருந்த பின்னர் வாஜஸ்ரவஸ் தம் புதல்வனாகிய நசிகேதஸ்ஸோடு ஆங்கு வந்தனர். அப்பொழுது அவர் பலவாறு கருதுவாராயினர் அவை:— "இராஜாக்களால் செய்து தலைக்கட்டத்தக்க இந்த விசுவஜித்தென்ற யாகத்தைச்செய்து முடித்துவிட்டோம்; இனி நம்மிடத்திலுள்ள எல்லாப் பொருள்களை விநியோகஞ் செய்தாலன்றி யாகம்பூர்த்தியாகாதன்றோ! முன்னொருகாலத்தில் சூரியவம்சத்தில் சக்ரவர்த்தித்திருமகனுடைய மூதாதைகளில் ஒரு

வனான ரகுவென்பான் எல்லா அரசர்களையும் ஜயித்து இந்த விசுவஜித் யாகத்தைச்செய்து தனக்குள்ள எல்லா சொத்தையும் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டுத் தான் மண்பாண்டங்களை உபயோகப்படுத்திக்கொண்டு ராஜ்யபரிபாலனம் செய்து வந்தான்.

அப்பொழுது வரதந்து மஹருஷியின் சிஷ்யரான கௌத்ஸர் தம்முடைய ஆசார்யனிடத்திலிருந்து பதினான்கு வித்யைகளையும் அப்யஸித்துக்கொண்டபின்னர் தம் ஆசார்யன் விரும்பாதிருக்கவும் அவரை நோக்கி 'ஸ்வாமி! அடியேனிடத்தில் குருதக்ஷிணை பெற்றுக்கொள்ள வேண்டும்' என்று நிர்ப்பந்தித்தார். அப்பொழுது அவர் 'பதினான்கு கோடி ரூபா வேண்டும்' என்று கேட்டார். கௌத்ஸரும் அதற்குடன்பட்டு ரகுவினிடத்தில் யாசிப்பதற்கு வந்தார். ரகு மண்பாத்திரத்தில் அர்க்கிய முதலிய பூஜாத்ரவியங்களைக்கொண்டு வருவதைக்கண்டு 'அந்தோ! நம்மிச்சையை இவன் எவ்வாறு நிறைவேற்றிவைக்கப் போகிறான்' என்று கவலையுற்றிருந்தார். இஃதறிந்த ரகு இவரது விருப்பத்தை வினவித் தெரிந்துகொண்டு இவர் இச்சையையும் நிறைவேற்றி வைக்க எண்ணங்கொண்டு குபேரனை யடைந்து அவனை எதிர்த்து வெல்லத்தொடங்கினான். அப்பொழுது குபேரன் ரகுவினுடைய பேராற்றலுக்காற்றாது தான் விரும்பிய திரவியங்கட்கும் அதிகமான திரவியங்களைக் கொணர்ந்து பரிசிலாகக் கொடுத்தான். ரகு அந்தத் திரவியமனைத்தையும் கௌத்ஸருக்குக்கொடுத்து அவரது அநுக்ரஹத்தையும் பெற்று யாகபலனையும் அடைந்தானென்று நாமறிந்திருக்கின்றோமன்றோ! ஆதலால் நம்மிடத்திலுள்ள திரவியமெல்லாவற்றையும் நம்யாகத்திற்கு உபகாரமாகவிருந்த வாஸிஷ்டர் முதலானோர்கட்குப் பிரித்துக்கொடுத்து விடவேண்டும்" என்று கருதித்தம் சிஷ்யனாகிய சுமுகனை நோக்கி 'நீ வாஸிஷ்டர் முதலானோர்களை இங்கு அழைத்துக் கொண்டுவருவாய்' என்று நியமித்தார்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீபாண்டிய மதுராவைஷ்ணவ தசகோத்ர ஸ்வாமிகளுக்கு

ஓர் விஜ்ஞாபநம்.

கௌதம, ஆத்ரேய, கௌண்டிந்ய, ரேபகச்யப, காசியப, ஸ்ரீவத்ஸ, ஹரித, விசுவாமித்ர, கௌசிக, பாரத்வாஜ கோத்ரர்களாயுள்ள ஐநூறு ஸ்வாமிகள், ஸ்ரீபராதிய த்ரவிடவடம பிராம்மணோத்தம ஸ்ரீவைஷ்ணவர்களில் ஸ்ரீமத் வசிஷ்டாத்வைத மதஸ்தாபநாசார்யராகிய பகவத்ராமாநுஜாசார்யரின் ஆஜ்ஞையை மேற்கொண்டும், பெரியாழ்வாரிடத்தில் பஞ்ச ஸம்ஸ்காராதிகளைப் பெற்ற ஸ்ரீவல்லபதேவபாண்டியனுடைய வம்சஸ்தரான மதுரையம்பதிக்கதிபதி ஸ்ரீவீரபாண்டிய தேவரின் பிரார்த்தனைக்கிரங்கியும் குடும்ப சமேதராய் சகவூ 1029ல் செல்லாநின்ற வியநாம ஸம்வத்ஸரம் தைமீ கிருஷ்ணபஞ்சமியில் பாண்டிய நாட்டிற்கு வடதேசமிருந்து எழுந்தருளினார்கள்.

பின்பு இவர்கட்கு ஸ்ரீவீரபாண்டிய தேவரால் அநேக கிராமங்கள் தர்மசாசனஞ்செய்து கொடுக்கப்பட்டன. உபயவேதாந்த ப்ரவர்த்தகர்களாயும், ஸர்வசாஸ்த்ர பாரங்கதராயுமிருந்து பிரக்யாதி பெற்ற இந்த தசகோத்ர ஸ்வாமிகளே நவீனமாய் 'செல்லூரார்' என்று நாமம் வழங்கப்பெற்றுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களாவார்.

செல்லூர் ஸ்ரீவைஷ்ணவர்களென்று திருநாமம்பெற்ற தசகோத்ர ஸ்வாமிகளுள் வேங்கடகிருஷ்ண வாஜபேயி என்பவர் சக 1129ஆன பிரபவநாம ஸம்வத்ஸரத்தில் திருமாலிருஞ்சோலையில் காபாலிகனான குடாமிச்ரனை ஜயித்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து சிறுவாலை முதலான கிராமங்களைப் பரிசிலாகக்கொடுக்கப்பெற்றனர். அந்த ஸம்வத்ஸரத்தில் கிருஷ்ண ஸூரி என்பவர் பரமேசுவரமிச்ரனை ஜயித்து பஞ்சஸம்ஸ்காராதிகளைச்செய்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து ஆனையூர்க் கிராமத்தைச் சன்மானமாகப் பெற்றனர்.

பின்பு சகஹு 1374 ஆன ருத்ரோத்காரி ஸம்வத்ஸரத்தில் ஸ்ரீரங்கராஜாசார்யர் மதுரையில் பௌத்தமதவாதியான திகம்பர மிச்ரனை ஜயித்ததற்கு மதுராதிபதியான மஹாவில்லிபாணதிராய னிடமிருந்து செல்லூர் கிராமத்தைப் பெற்றனர்; என்று தர்ம சாசன மூலமாயும் தெளிவாகிறது.

செல்லூர் கிராமத்திற் கெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்கள் பிரக்யாதிபெற்ற காரணம்பற்றித் தசகோத்ர ஸ்வாமிகளனைவரும் 'செல்லூரார்' என்று சக 1374 வருஷத்திற்கிப்பால் அழைக்கப் பட்டுவருகின்றனர். தசகோத்ர ஸ்வாமிகளான ஸ்ரீவைஷ்ணவர் களின் ப்ரபாவமனைத்தும் M. A. பட்டம் பெற்றவரும், சென்னை வாசியும், துவரைமான் ஸ்ரீ. உ. வே. நடாதூர் சுந்தரராஜாசார்ய ஸ்வாமி குமாரருமான ஸ்ரீநிவாஸையங்காரால் இயற்றப்பெற்ற "ஸ்ரீபாண்டிய மதுராவைஷ்ணவ ப்ரபாவம்" என்ற நூலில் பரக் கக்காணலாம்.

தசகோத்ர ஸ்வாமிகள் இராமநாதபுரம் ஜில்லாவிலும், மதுரை ஜில்லாவிலுமிருக்கின்ற சுமார் 150 கிராமங்களில் சுமார் 2000 ஜனத்தொகையுடன் கூடியவர்களாயிருந்தும் சமூகச்சேர்க்கையில் லாத குறைவால் கலிகாலக்கேட்டை நிவர்த்தித்து முன்னோர்களின் கொள்கைகளைக் கைப்பற்றிப் பூர்வநிலைமையடைதற்கியலாதிருக் கின்றனர்.

தற்காலத்தில் சமூகங்கள் பல தலையெடுத்துவருகின்றன. 'சேர்ந்து வாழ்வதே சிறந்தவலிமை' என்றபடி தசகோத்ர ஸ்வாமி களில் சமூகச்சேர்க்கை ஏற்பட்டுத் தழைத்தோங்கப் பெரியோர்கள் கிருபைசெய்யின் அது பலகுறை நீங்குவதற்குப்பெரும் சாதனமா யிருக்கும்.

இந்த தசகோத்ர ஸ்வாமிகளில் மதுரை வக்கீல் ஸ்ரீமாந் நரஸிம் மையங்கார்ஸ்வாமி, சிவகெங்கை வக்கீல் ஸ்ரீமாந் ஸௌமியநாராய ணையங்கார்ஸ்வாமி, சென்னை வக்கீல் ஸ்ரீமாந் A. ஸ்ரீநிவாஸையங் கார்ஸ்வாமி என்ற இவர்கள்போன்றவர்களும், B. A, L. T. பட்டம் பெற்ற காரைக்குடி ஸ்ரீமாந் இராமாநுஜையங்கார் ஸ்வாமிபோன்ற

உபாத்தியாயரவர்களும் இன்னும் லௌகிக வைதிக பெரியோர்களும் தசகோத்ரஸ்வாமிகளின் நிலைமையைக்கவனித்துக் குடும்பத்திற்கு ஒருரூபாவீதம் மதுரைச் சித்திரோத்ஸவ காலத்தில் வசூலித்துப் பண்டு ஏற்படுத்தி அதனால் துண்டுப்பத்திரிகைகள் மூலம் பலவிஷயங்களைச் சமூகத்தாருக்குத் தெரிவித்துச் சமூகச்சங்கம் ஏற்படுத்தி "பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்பதை ப்ரத்யக்ஷமாக்கும்படி எம்பெருமான் அருள்புரிவானாகில் நன்மைகள் பல விளையுமன்றோ!

சகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் பொதுவாயுள்ள "ஹரிஸமய திவாகரம்" சுமார் 150 கிராமங்களிலுள்ள தசகோத்ர ஸ்வாமிகளின் திருமாளிகைகளில் மாதமொருமுறை ஸேவைஸாதிக்குமாகில் பொதுவான தர்மஸூக்ஷ்மங்களையும் பெரியோர்களால் அருமையாக எழுதப்பெறுகிற ஸம்ப்ரதாய விஷயங்களையும் அனைவரும் நன்கறிந்து உஜ்ஜீவிப்பதற்கு இடமுண்டு. ஆதலால் எல்லோரும் திவாகரத்தை ஆதரிப்பார்களாக.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரன் மேற்கண்ட பெரியோர்கள், தசகோத்ரஸ்வாமிகளின் சமூகச்சங்கம் ஏற்படுத்தி முன்னேற்றமடையுமாறுசெய்ய அநந்தகோடி தண்டன் ஸமர்ப்பித்துப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
அருப்புக்கோட்டை.
ரா. லக்ஷ்மணையங்கார்,
பேரையூர்.

ஸ்ரீ:

மதிப்புரை.

ஆனந்தபோதினி:-என்ற இப்பத்திரிகை எல்லா வூர்களிலும் உலாவிப்பிரசித்தியுற்றுப் பலருக்கும் பயனளித்து வருவதை யாவருமறிவர். இப்பத்திரிகையின் உரிமையாளர் இது, இன்னும் ஆக்கமுறவேண்டுமென்ற கருத்தால் இப்பெயருடன் வாரப்பத்திரிகை (விபவஸு தைமீ முதல்) தொடங்கிப் பிரசுரித்துள்ளார். இதில் பலதுறையாளரும் விரும்பத்தக்க பற்பல வகையினவாய வியாஸங்கள் பயில்வோர்க்கின்சுவைபயப்ப விளங்குகின்றன. இதன் வருஷ சந்தா ரூ 3—0—0 வேண்டுவோர் சென்னை ஆனந்தபோதினி ஆபீஸுக்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

விதவாவபந வித்வம்ஸநம்:— இஃதொருகண்டன நூலாம். வேதாந்த தீபிகை (விபவஸு புரட்டாசிமாதத்திய) சஞ்சிகையில் மாயவரம் ப்ரஹ்மஸ்ரீ வித்வான் T. S. நடேச சாஸ்திரிகளால் "ஹிந்துவிதவைகள் தலைமயிரை நீக்கவேண்டுமா" என்ற தலைக்குறிப்புடன் எழுதப்பெற்ற வியாஸத்திற்குத் தக்கசமாதானங் காட்டி இதில் சிறாஉவப்பெற்றுளது. பெருமாள்கோயில் பிரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்யஸ்வாமி இந்நூலாசிரியராவார். இதன் விலை அணா4. வேண்டுவோர் "திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை" ஆபீஸ் 32, பந்தர் தெரு மதராஸ் என்ற விலாசத்திற்கெழுதிப்பெற்றுக்கொள்க.